ஐ.டி.எண்.101/2021 11.07.2025

தொ.த.சாட்சி 1 ராமமூர்த்தி குறுக்கு விசாரணை

ஜனநாயக தொழிலாளர் சங்கத்தில் எப்போது உறுப்பினராக இருந்தேன் என்று எனக்கு தேதி நினைவில் இல்லை வருடம் 2018 என்று நினைக்கிறேன். நான் சங்கத்தில் பதவியில் இல்லை. தொழிற்சாலையில் யுனியன் தலைவராக உள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து தான் கையொப்பமிட்டேன். நான் 1996-ல் தொழிற்சாலையில் பணியில் சேர்ந்தேன் அப்பொழுது இருந்த உற்பத்தி வருடா வருடம் உயர்ந்து தான் காணப்படுகிறது என்றால் சரிதான். 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் எவ்வளவு உற்பத்தி நடைபெற்றது அதற்குண்டான வித்தியாசம் என்ன என்று எனக்கு தெரியாது. 2018-ம் வருடம் ஜனவரி மாதம் தொழிற்சாலையில் எந்த உற்பத்தியும் நடைபெறவில்லை ஆனால் நிர்வாகம் எங்களுக்கு சம்பளம் வழங்கியது என்றால் சரியல்ல உற்பத்தி நடைபெற்றது. நான் அப்பொழுது கம்பெனியில் டெய்லராக பணிபுரிந்தேன். ஜனவரி மாதம் ஒவ்வொரு நாளும் நான் 500 ஜோடியை தைத்து கொடுத்தேன். வேலை கேட்டு நிர்வாகத்தினரை எத்தனை முறை அனுகினேன் என்று எனக்கு நினைவில் இல்லை. எனக்கு வேலை வழங்க கோரி தொழிற்சங்கத்திடம் நான் முறையிட்டேன். நான் சங்கத்தின் உறுப்பினராக இருப்பதால் நிர்வாகம் எனக்கு கடிதம் எதையும் அனுப்பியதில்லை. கம்பெனிக்கு எவ்வளவு ஆர்டர்கள் வருகின்றன என்ற விவரம் எனக்கு தெரியாது. கம்பெனி மூடப்படுவது குறித்து 2018-ம் ஆண்டில் ஈ.பி.எப். அலுவலகத்திற்கும் ஈ.எஸ்.ஐ. அலுவலகத்திற்கும் நிர்வாகம் கடிதம் அனுப்பியது குறித்து எனக்கு தெரியாது.

**வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd./--Tmt.S.Uma Maheswari,
Presiding Officer (FAC),
Additional Labour Court,Vellore.